செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது.

உ

சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதிஸு (1889) ஆவணி மீ 28 உ, அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அ௨] யாழ்ப்பாணம்:- விரோதிகிருது ஸு ஆடி மீ உகஉ வெள்ளிக்கிழமை (6-8-1971) [இல-௩௭

# நல்லூர் முருகனை வந்திப்போம்


## மஞ்சத் திருவிழா
சிறப்பாக நடைபெற்றது

## புந்திக் கிலேசம் போக்க வழி

சிந்திக்கி லேனின்று சேவிக்கி
லேன்றண்டைச் சிற்றடியை
வந்திக்கி லேனென்றும்
வாழ்த்துகி
லேன்மயில் வாகனனைச்
சந்திக்கி லேன்பொய்யை
நிந்திக்கி
லேனுண்மை சாதிக்கிலேன்
புந்திக்கி லேசமுங் காயக்கி
லேசமும் போக்குதற்கே.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மஞ்சத் திருவிழாவும் கதிர்காமத் தீர்த்தத் திருவிழாவும் அடுத்தடுத்த நாட்களில் நிகழ்வது திருவருட் செயலாகும்.

அடியார்கள் இருதலங்களிலும் தரிசித்து முருகனருளைப் பெற வாய்ப்புள்ள காலம். அஞ்ஞான இருளைத் துரந்து மெஞ்ஞானவொளியைப் பெறும் பொருட்டு முருகனை வழிபடுவோம்.



முருகப்பெருமான் பவனிவரும் மஞ்சம்

## சைவ சித்தாந்தத்தை உலகில் விளக்க உழைத்த உத்தமர்

சைவபரிபாலன சபையின் தலைவராக மூவாண்டுகள் தொண்டாற்றிய பெரியார் சித்தாந்த வித்தகர் திரு. வே.



நாகலிங்கம் J. P; U. M. அவர்கள் 1-8-71 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தனர்.

சென்னைச் சைவசித்தாந்த சமாஜம் 1954-ல் நடத்திய சைவ மகாநாட்டிலும், சைவ பரிபாலன சபை நடத்திய சைவ மகா நாட்டிலும் தலைமை வகித்தும், சொற்பொழி வாற்றியும் அரும்பணி புரிந்த பெரியார்.

சைவ சித்தாந்தப் பிரசாரமே வாழ்க்கையில் இலட்சியமாகக் கொண்டவர். சைவத் தெய்வத் திருமுறைகளை முறையாகப் பாராயணஞ் செய்துவந்தனர். திருவாசகத் திருமுறையை மரபின்படியோதி உள்ளத்தை உருக்கி அடியார்களை நன்னெறிப்படுத்தியவர்.

## சடையம்மா மடம்

நல்லூர் திருவிழாக்காலத்தில் நல்லூர் சடையம்மா மடத்தில் நடைபெற்றுவந்த அன்னதானத்தை இம்முறையும் நல்லை, ஞான சம்பந்தர் ஆதீனத்திலேயே நடத்துவதென ஸ்ரீமதி சடையம்மா மட பரிபாலன மகா சபையினர் தீர்மானித்துள்ளனர்,

## வட்டுக்கோட்டை அபிவிருத்திச் சபை

வட்டுக்கோட்டையைச் சேர்ந்த சமூகத் தொண்டன் திரு. எ்ன். நடராசா 8-7-71 தொடக்கம் வட்டுக்கோட்டை அபிவிருத்திச் சபையில் ஒரு அங்கத்தவராக நியமனம் பெற்றுள்ளார்.

திரு. நடராசா, வட்டுக்கோட்டை பஸ் பிரயாணிகள் சங்கத் தலைவரும், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் நிருவாக சபை அங்கத்தவரும், யாழ்ப்பாணம் உன்னத உறுதுணையாளர் சங்கத்தின் அங்கத்தவருமாவர்.

## திருக்கேதீச்சரப் பாதயாத்திரை

[வழமைபோல திருஞான சமபந்தர் – யாத்திரைச் சபையினர் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிலிருந்து திருக்கேதீச்சரத்துக்குப் பதினைந்தாவது ஆணடுப் பாதயாத்திரை புரிந்த தினத்தன்று (1-8-71) யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜராசேஸ்வரியம்பாள் கோவிலில் வழிபாடு செய்து புராணபடனத்தை யாரம்பித்த பின், 'விநாயகர் வழிபாடு' என்ற 15-ஆவது புனர் வாழ்வு மலர்ப் பிரதிகளை அடியார்களுக்கு இலவசமாக வழங்கினர். அம்மலரில விநாயகர் பரத்துவமும் வழிபாட்டின் பயனும் சிறப்பாக விளக்கப்பட்டிருக்கின்றன. இவ்வெளியீட்டை பரமேசுவரக் கல்லூரி முன்னுள் அதிபர் சைவப்போறிஞர் மு. ஞானப்பிரகாசம் அவாகள ஆங்கு வாசித்தார்கள். வெளியீட்டிலுள்ள ஒரு பகுதி இங்கே தரப்படுகின்றது]

"வையகமுந் துயர் தீர்கவே"
—திருஞானசம்பந்தசுவாமிகள்.

### விநாயகர்வழிபாடு

விநாயகர் வழிபாடு மிக மிகப் பழமையான வழிபாடு என்பதே எங்கள் தாழ்மையான அபிப்பிராயம்.

அண்டசராசரங்களையெல்லாம் தோற்றுவிக்கும் மாபெரும் நாதரூப சக்தியையே பிரணவ ரூபியென்றும், ஓங்காரத் தெய்வம் என்றும், விநாயகக் கடவுள் என்றும் கூறுவர். அந்த மாபெருஞ் சக்தியைத் தத்ரூபமாகக் கண்ட பெரியோர்கள் என்று இருந்தனரோ, அன்று தொடக்கம் விநாயகர் வழிபாடு; இந்தியா, இலங்கை போன்ற இந்தப் புண்ணிய பூமிகளில் வாழையடி வாழையாய் நிலவிக் கொண்டே வருகின்றது எனக் கூறலாம். எங்களைப் பொறுத்த வரையில், கோயில்கள், வீடுகள்; கிராமப் புறங்கள், குளக்கட்டுகள், வயல் வரம்புகள், நாற்சந்தி முச்சந்திகள். காட்டு வழிகள் ஆகிய எல்லா இடங்களிலும் சர்வ சாதாரணமாய் வந்து அநுக்கிரக லீலைகள் புரிபவர், விநாயகக் கடவுள் ஆகும். எங்கள் உள்ளத்தில் உறுதியாய் இருக்கவேண்டியது "விநாயகமூர்த்தி, மூலாதாரமூர்த்தி. மிகமிகப் பழைமமூர்த்தி, மிகமிகப் பெரிய மூர்த்தி, மிகமிக அநுக்கிரக மூர்த்தி" என்ற நம்பிக்கை ஒன்றுமே அந்த நம்பிக்கையை நன்கு வளர்த்து, மேன்மேலும் வலுப்படுத்தக் கூடிய முறையில் சென்ற நூற்றாண்டிறுதியில் தமிழகத்தில் வாழ்ந்த புலவர்பெருமான் ஒருவர் விநாயகமூர்த்தி மீது பின்வரும் பாடல்களைப் பாடி எமக்குத் தந்துள்ளார், அவற்றைப் படித்து மனனஞ் செய்து வழிபாட்டு நேரங்களில் விநாயகப் பெருமானை முறையாக வணங்கியதன் பின்னர் அன்பர்கள் அவர் சந்நிதியில் நின்று அவர்க்குரிய தோத்திரங்களைக் காதலாகிக் கசிந்துருகிப் பாடிப் பெரும் பெரும் பயன்களையெல்லாம் பெற்றுச் சிறக்க வேண்டும் என்பதையே நாங்கள் பெரிதும் விரும்புகின்றோம். எம்மையெல்லாம்

(வளர்ச்சி 2-ஆம் பக்கம்)

உ

## சைவபரிபாலன சபை நால்வர் கோயிற் றிருப்பணிநிதி

| | | ரூபா சதம் |
|---|---|---|
| | முன் வரவு | 779-00 |
| V | செல்லப்பா | 25 00 |
| K | துரையப்பா | 25 00 |
| S | ஆறுமுகம் | 10 00 |
| K | செல்லையா | 10 00 |
| K | காசியர் | 10 00 |
| K | சிவசம்பு | 5 00 |
| | ஆகக் கூடியது | 864-00 |

குறித்த திருப்பணி போதிய நிதி இன்னும் சேராமையினல் தாமதிக்கப்பெற்றிருக்கின்றது. அன்பர்கள் தங்கள் தங்களாலியன்ற நிதியை எமக்குக் காலதாமதமின்றி அனுப்பித் திருப்பணியைப் பூர்த்தி செய்ய உதவி புரிவார்களாக. நிதி உதவுகின்றவர்கள் பெயர் இந்துசாதனத்திற் பிரசுரிக்கப்பெறும்.

திருமதி. ம. அருணசலம்
தனதிகாரி
நால்வர் கோவிற்றிருப்பணிச்சபை
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம். 2-8-71

### நாவலர் நல்வாக்கு

பாவத்துக்கு அஞ்சிப்பொருள் சம்பாதித்து, பெரியோர்களுக்கும் வறியவர்களுக்கும் பங்கிட்டு, நீயும் உண்ணு.

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

## அறிவித்தல்

30-7'-71 இல் நடைபெற்ற சைவபரிபாலன சபையின் நிருவாக சபைக் கூட்டத்தில் திரு. வை. இரகுநாத முதலியார் அவர்களைப் பதில் காரியதரிசியாகக் கடமையாற்றுமாறு நிருவாகசபை நியமித்திருக்கின்றது என்பதை அறியத் தருகின்றது.


திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

விரோதிகிருது ஹூ ஆடி மீ உக-உ வெள்ளிக்கிழமை [1971]


## சித்தாந்த வித்தகர் திரு. வே. நாகலிங்கம் அவர்கள் மறைவு

சிறந்த குணசீலரும், சித்தாந்த சாத்திரங்களை நன்கு கற்றுணர்ந்தவரும் கற்றோராலும் பிறராலும் நன்கு மதிக்கப்பட்டவரும், அடக்கம், இன்சொல் முதலிய பண்புகளுக்கு உறைவிடமாக வாழ்ந்தவரும் வழக்கறிஞருமாகக் கண்ணியமாகக் கடமையாற்றி வாழ்ந்து வந்த சைவப் பெரியார் சித்தாந்த வித்தகர் திரு. வே. நாகலிங்கம் அவர்கள் 1-8-71 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தமை யாவருக்கும் பெருமதிர்ச்சியை யுண்டாக்கிவிட்டது. இவர் சைவ பரிபாலன சபையினது தலைவராக மூன்று வருடகாலம் கடமையாற்றி நற்றொண்டு புரிந்தவர். சைவ பரிபாலனசபை நடத்திய சைவ மகாநாடுகளிலும் பிற விழாக்களிலும் தலைமை வகித்தும் சொற்பொழிவாற்றியும் நற்றொண்டு புரிந்தனர்.

நல்லூழின் வசத்தால் இவர் கொழும்பில் சட்ட நூற்கல்விகற்ற காலத்தில் சைவப்பெரியார் திருவிளங்கம் அவர்களது தொடர்பு இவருக்குக் கிடைத்தது. அவரிடம் சைவசித்தாந்த நூல்களைக் கற்றனர். அவர் எழுதிய சிவஞானசித்தியார் உரை, கந்தரலங்கார வுரை, திருப்புகழுரை, சிவப்பிரகாச உரை நூல்கள் வெளிவருதற்கும் இவர் துணை புரிந்தனர்.

சென்னைச் சைவசித்தாந்த சமாஜம் காலத்துக்குக்காலம் யாழ்ப்பாணத்திலிருந்து சைவப் பெரியார்களைச் சைவ மகாநாடுளுக்குத் தலைமை வகிக்க, அழைத்துள்ளது. ஸேர். பொன். இராமநாதன் சபாரத்தின முதலியார், த. பொன்னம்பலபிள்ளை, சுவாமிநாத பண்டிதர் முதலியோர் சமாஜத்தினுடைய சைவ மகாநாடுகளுக்குத் தலைமை வகிக்க அழைக்கப் பட்டனர். அவ் வழக்கத்தைப் பின்பற்றி இவரும் 1954-ம் ஆண்டில் சமாஜத்தின் சைவ மகாநாட்டில் தலைமை வகிக்க அழைக்கப்பெற்றனர். இவருடைய சைவ சமய அறிவும் ஆற்றலும் அவர்களால் மெச்சப் பெற்றன. இந்தியாவுக்குப் பலமுறை யாத்திரை செய்து சமாஜத் தலைவர்கள் சுவாமி வேதாசலம் C. K. சுப்பிரமணியமுதலியார் திரு சச்சிதானந்தம் பிள்ளை, திரு. ம. பாலசுப்பிரமணியமுதலியார் போன்றவர்களுடைய தொடர்பினால் இவர் தம்முடைய சித்தாந்த அறிவை வளர்த்து வந்தனர்.

ஞான நூல்களையோதுதலும், ஓதுவித்தலும் பிறர்க்குரைத்தலும், நற்பொருளைக் கேட்டலும், அப்பொருளைச் சிந்தித்தலும் சிறந்த ஞான பூசையாகும். இப்பெரியாரும் தம்முடைய லௌகிகக் கடமைகளுடன் ஓய்வு நேரங்களில் இவ்விதமாக ஞான பூசையே செய்து வந்தனர். ஞானபூசை இறைவனடி சேர்விக்குமென ஞான நூல்கள் கூறுகின்றன. இப்பெரியாரும் அடக்கமாகப் பேர் புகழை விரும்பாது தெய்வ வாழ்வு வாழ்ந்து இறைவனடி சேர்ந்தனர்.

இவருடைய பிரிவு சைவபரிபாலன சபைக்குப் பெரும் இழப்பாகும். இவருடைய பிரிவினால் துன்புறும் அவர்கள் பிள்ளைகளுக்கும் மற்றும் சுற்றத்தவர்களுக்கும் எங்கள் அநுதாபத்தைத் தெரிவிக்கின்றோம். அவருடைய ஆன்மா சாந்தியடைவதாக.

## திருக்கேதீச்சர

(1- ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

தட்டி எழுப்பிப் புதுவாழ்விற்குள்ளும் புனர்வாழ்விற்குள்ளும் புகுத்தக்கூடிய மனோநிலையையும், திடசித்தத்தையும். அன்புநெறியையும் தரவல்ல அற்புதமான சக்தி வாய்ந்தனவாய்க் காணப்படுகின்றன. இங்கு தரப்படும் 'விநாயகமூர்த்தி பதிகம்' எனப்படும் பாடல்கள், அன்பர்கள் ஓல்லை ஆறி. உள்ளம் ஒன்றி' இவற்றைப் படித்து விநாயகப் பெருமானுக்கு ஆளாதல் வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்.

### விநாயகமூர்த்தி பதிகம்

சிற்றுணர்வாற் குற்றமென்ன
  செய்துளோ னேனுமவை
முற்றுமினி நீபொறுத்தேன்
  முன்னிற்பாய்-கற்றுயர்ந்தோர்
புந்திதனிற் றோன்றிப்
  பொழியுங் கருணைமதத்
தந்திமுகப் பிள்ளாய் சரண்.

கற்றுயர்ந்தோர் - கல்வியின் பயனைக் கண்டவர்கள். கருணை மதம் - உயிர்களிடத்தில் காணப்படும் அகங்கார மதம்போலல்லாமல், விநாயகமூர்த்தியிடத்துள்ளது கருணைவெள்ளமாகிய மதம்,

சரணமலர் வாழ்த்தித்
  தமிழ்சொலப்பெற் றோர்க்கு
மரணபவ மாற்ற
  மருந்தே-கிரணவரைக்
கொப்போதுந் தும்பிமுகத்
  தோங்காரத் துப்பொருளே
யெப்போதுங் காப்பா யெனை.

மரணபவம் - மரண பயம். கிரணவரை - ஒளிமலை, தும்பி முகம் - யானைமுகம். 2

எனைத்துந் திருவருளா
  லின்றளிக்குந் தேவே
நினைத்தன் பொடுதுதித்து
  நின்றோர்-வினைத்துன்ப
மாற்றுங் கயமுகத்து
  வள்ளால் விரைந்தெனையீ
டேற்றுஞ் சமைய மிது.

கயமுகம் - யானை முகம். 3

சமையந் தோறுநிறைந்த
  தற்பரமே யன்பர்க்
கமையுந் தனித்தேள்
  ளமுதே-யுமைதந்த
கண்மணியே யானைமுகக்
  கற்பகமே பேரின்ப [ந்து.
விண்மணியே யாள்வாய் விரை

கற்பகம் - ஒரு குறையும் வரவிடாது, வினைதவற்றை யெல்லாந் தமது கருணைவெள்ளத் தியல்பால் வழங்கிநிற்கும் பெருமான். 4

விரைததும்பு ஞானமத
  வேழமுகத் தெந்தாய்!
உரைகடந்து நின்ற
  வொளியே-வரைவிளங்கப்
பாரதத்தை முன்னெழுதும்
  பாசாங் குசதரவென்
கோரதத்தை மாற்றியருள் கூர்

கோரதம் - குரோதம் என்னும் குணத்தைக் குறிப்பது போலும், 5

கூரியவேற் கண்ணர்
  கொடியமய லைததவிர்த்துச்
சீரியபே ரினபத்
  திறனருளிப்-பாரிலெனை
நீயடிமை கொண்டு
  நிதங்காத் திடல்வேண்டுந்
தூயமத வேழமுகத் தோய்.

நிதம் - நாள்தோறும், 6

தேர்யுங் களப
  சுகந்தமட வார்விரகப்
பேயுங் கவலைப்
  பிணியுமினி-யோயும்
படிபுரிந்து வேழமுகப்
  பண்ணவனே யென்னை
யடிமைகொண்டு நீயாண் டருள்.

பண்ணவன் - தேவன். 7

வளர்ச்சி 3ம் பக்கம்

## கந்தப்புராணம் உணர்த்தும் உண்மைப் பொருள்

"மும்மலங்களில் ஆணவம் அழியாதது. ஆணவத்தின் முனைப்பினாலேயே ஏனைய மலங்கள் தோன்றுகின்றன, கன்மம் ஆணவத்தின் முனைப்பால் உண்டாவது. கன்மத்தை அனுபவித்துத் தொலைக்க மாயை உதவுகின்றது மாயை ஒடுங்கக் கன்மம் அனுபவித்துத் தொலைக்கப்பட எஞ்சியிருப்பது ஆணவமே. இவ்வாணவம் இறைவன் அருள் நோக்கில் அடங்க உயிர் பேரின்பத்தை அடைகின்றது. இதனை உணர்த்துகின்றது சிங்கமுகாசுரன் வதமும், சூரன் சேவலும் மயிலுமாகத் தோன்றி முருகப் பெருமானின் கொடியும் ஊர்தியும் ஆக மாறிய தன்மையும். தெய்வயானை திருமணம் கற்பின் நெறியைப் புலப்படுத்துகின்றது. முருகப்பெருமானின் மூர்த்தம் இச்சா சக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி மூன்றும் வெளிப்படத் தோன்றும் திவ்விய மூர்த்தியாகும்"

என்று சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் திரு மூ. திருஞானசம்பந்தபிள்ளை வேலணை கிழக்கு நால்வர் மடத்தில் நடைபெற்ற கந்தபுராணத் தொடர் சொற்பொழிவின் 8-ஆம் நாள் நிகழ்ச்சியின்போது கூறியருளினர் வித்துவான் சைவப்புலவர் திரு. வ செல்லையா தலைமை வகித்தார். மடாதிபதி வ. க. செல்லப்பா சுவாமிகள் விழாவினைத் தொடக்கி வைத்தார்.

## சங்காபிடேகமும் தண்டிகை உற்சவமும்

யாழ் நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ ராசேஸ்வரியம்பாள்கோயில் மகாகும்பாபிடேகத்தைத் தொடர்ந்து நடைபெற்றுவரும் விசேட அபிடேகப் பூர்த்தியாகிய 45-ஆம் நாள் மண்டலாபிடேகம் எதிர்வரும் 13-8-71 வெள்ளிக்கிழமையன்று ஆசிரியர் திரு. ச சதாசிவம் அவர்கள் உபயமாக நடைபெறும். முற்பகலில் சங்காபிடேகமும், இரவு தண்டிகைத் திருவிழாவும் கற்பூரத் திருவிழாவும் நிகழும். அன்று இரவு 7 மணிக்கு நல்லூர் பஜனைச் சபையினரும் — யாழ் நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக் கழகத்தினரும் பஜனை நடாத்துவார்கள். அதையடுத்து பண்ணிசைக் கச்சேரி, மேளக்கச்சேரி ஆதியன இடம்பெறும்.


வெளிவந்துவிட்டது.

### சிவத்தியான மாலை

ஔவையார் அருளிய விநாயகரகவல், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிய திருவெழுகூற்றிருக்கை, மணிவாசகர் பாடிய சிவபுராணம் ஆகிய மூன்றும் பத்தர்களின் தினசரி பாராயணத்துக்காக பதிகவரலாறு. தெளிவுரை முதலியவற்றோடு சேர்த்துள்ள கைநூல். விலை சதம் 35

யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலுமுள்ள பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும்.

வெளியிட்டோர்:
யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம்
411/1 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.



### கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி. நுணுவில் மேற்கு, காசிப்பிள்ளை அம்பிகைபாகர் — வழக்காளி
வழ: இல, M. B. 3741
சாவகச்சேரி, சாவகச்சேரி வடக்கு,
(1) நல்லையா சிவஞானம் (2) பெண் மகேஸ்வரி — எதிராளிகள்

சாவகச்சேரி டிஸ்திறிக் கோட்டின் M. B. 3741-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி- பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1971-ம் ஹூ செப்டெம்பர், (புரட்டாதி) மீ 20-ம் உ (20-9-71) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபாய் 3650/-ம் இதில் ரூபாய் 2000/-க்கு 29-4-69-ம் திகதி தொடக்கம் 30-10-69-ம் திகதி வரைக்கும் 100க்கு 10வீத வட்டியும் பின் திகதி தொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 340-40 சதம், இதில் ரூபாய் 2000/-ம் 16-5-71-ல் கோட்டில் கட்டப்பட்டது,

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கரைச்சிப் பகுதி பச்சிலைப்பள்ளி கராச்சிக் கோயிற்பற்று ஒஞ்சுப்பரந்தனிறை "செட்டி ஓட்டு வயல்" நெற்பரப்பு (225-ம்) இது உத்தரவுபெற்ற உலாந்தா வி. ஆறுமுகத்தால் 1945-ம் ஆண்டு சித்திரை மாதம் 10ம் திகதி 353/B இலக்கப் படத்தில் 8ம் துண்டாகவும், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 17210ம் இலக்க வழக்கில் அளைத்ததும் எல்லை கிழக்கு வல்லிபுரம் முருகேசுவின் ஆதனமும், றோட்டுக்கு ஒதுக்கப்பட்ட நிலமும் வாய்க்காலும். வடக்கு சின்னத்தம்பி கணபதிப்பிள்ளைக்கும் சகோதரனுக்குமுரிய ஆதனமும். 353/B இலக்கப் படத்தில் 9ம் துண்டு இரத்தினசபாபதி வயித்திலிங்கத்திற்கும் சகோதரனுக்குமுரிய ஆதனம். மேற்கு குறித்த படத்தில் 7ம் துண்டு கே, தம்பிப்பிள்ளை மகள் வரதலட்சுமியின் ஆதனம், தெற்கு முடிக்குரிய காணியும், ஒழுங்கையும், குளமும், இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Valuer

தெல்லிப்பழை. 20-7-71

ஏ 178 6-8-71

## திருமுறைப் பண்ணிசை விழா

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் நடத்தும் தேவாரப் பண்ணிசைப் போட்டியும் விழாவும் இராமநாதன் இசைக் கல்லூரியில் 18-8-71 ந் திகதி புதன் கிழமை காலை 9 மணிக்கு நடைபெற விருக்கின்றது. இதில் யாழ்ப்பாணப் பகுதியில் தோற்றும் போட்டியாளர்களின் பூர்வாங்கத் தேர்வு நடைபெறும். இம்மாதப் பிற்பகுதியில் கொழும்புப் பிரதேசப்போட்டியாளர்களுக் குரிய தேர்வு கொழும்பு இந்துக் கனிட்ட பாடசாலை மண்டபத்தில் நடத்தப்படும்.

## இல்ல விளையாட்டுப் போட்டி

கொக்குவில் இந்துக்கல்லூரி இல்லங்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி 7-8-71 ந் திகதி கல்லூரி விளையாட்டு மைதானத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. பிரதம விருந்தினராகப் புத்தளம் நீதிபதி கி. பாலகிருஷ்ணன் அவர்கள் கலந்து கொண்டார். வெற்றி பெற்ற வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் திருமதி பாலகிருஷ்ணன் அவர்கள் கேடயங்களையும் வெற்றிக் கிண்ணங்களையும் அளித்தார்.

## திருக்கேதீச்சர… …

2-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

அருளா யுருவா
யருவர்ப் பேரின்பத்
தேருளாய் முதியமறை
தேடும்-பொருளாய
தநதிமகத் தோனே
தமியேன் குறித்தவரம்
வந்தினிது தந்துதவு வாய்.
முதியமறை - இருக்கு, யசுர்
சாமம், அதர்வணம் எழபற, 8
வாயாலு லுத்தர்தமை
வாழ்த்திவருந் தாமலேனை
நீயா தரித்து
நிதங்காப்பாய்-வியாத
தொண்டரித யாம்புயமாந்
தாயமணிக் கோயில்குடி
கொண்டகண நாதவருள் கூர்ந்து,
உலுத்தர் - பெற்ற கடனைத்
திருப்பிக கொடாதவர்கள், செய்
நன்றி கொன்றவர்கள். 9
கூர்ந்தமதி தந்தடிமை [னஞ்
கொண்டேனையாள் வேதமின்
சார்ந்தறிய மாட்டாத்
தனிக்களிறே-தேர்ந்து
நடைசிறந்த நின்சீர்
நவிலுந் திறமை
யுடையதன்றே யென்சிற்றுணர்வு
தனிகளிறு - ஒப்பற்ற யானை.
நடை சிறந்த - ஒழுக்கத்திற்
சிறந்த. 10

—0—

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் குருபூசை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனம், 25 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீ லஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகளின் உத்தரவின்படி, ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோவிலில் சைவசமய ஆசாரியர் நால்வருள் ஒருவரும், ஒருநூறு தேவாரத் திருப்பதிகங்கள் அருளியவருமான ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளின் குருபூசை விழா ஆடி 14 ஆம் நாள் ஆடிச் சுவாதி அன்று சிறப்பாகநடைபெற்றது. காலையில் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் சுந்தரமூர்த்திசுவாமிகள் புராணபடனமும் நடைபெற்று, இரவு வெள்ளை யானை வாகனத்தில் ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளும், குதிரை வாகனத்தில் ஸ்ரீ சேரமான்பெருமாள் நாயனாரும், திருவீதி உலாக் காட்சி வேதபாராயணம் அற்புத விளக்கத்தேவார பாராயணம் — அற்புத விளக்கத் சொற்பொழிவுகளுடன் நடைபெற்றது.

- (எமது சிதம்பரம் நிருபர்)
ஸ்ரீ மா. பாலசுப்பிரமணியன்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

இல. M. B. 10898

இடைக்காடு
காசிலிங்கம் கைம்பெண் ருசம்மா — வளக்காளி

எதிராக

1. கந்தப்பிள்ளை சங்கரப்பிள்ளை
2, பெண் சிவஞானம்

இருவரும் மாங்கொல்லை காங்கேசந்துறை — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10898-ம் இலக்க வளக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிககப்படும் ஒருதுண்டுக் காணி 1971-ம் ஸு ஆவணி மீ 23-ம் உ (23-8-71) திங்கட்கிழமை முற்பகல் 10-00 மணிக்கு அந்தக்காணிக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபாய் 3235/50 இன்னும் ரூபாய் 2500/-க்கு 19-6-69 தொடக்கம் 27-10-69 வரைக்கும் 10% வீதவட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5% வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபா 384/80 இதில் ரூபா 1000/- கொடுபட்டுள்ளது.

### ஆதன விபரம

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப் பிரிவு தெல்லிப்பளை கோயிற்பற்று "மாங்கொல்லை" பர. நில- இலா 2, 3 குளி வீடு வடகிழக்கு மூலையிலிருக்கும் கிணற்றில் பங்கும் வளிவாய்காலுருத்தும் இன்னுமதைச் சோர்ந்தவைகளும் இதற்கெல்லை கிழக்கு அழகரத்தினம் பெண் சரஸ்வதியினுதனமும் கிணறும், வடக்கு ஒழுங்கையும் தாமோதரம்பிள்ளை பெண மகேஸ்வரிக்கும் பங்காளருக்குமுரியவாதனம், மேற்கு முத்தையா ருசையாவுக்கும் துரையப்பா நவரததினததுக்குமுரியவாதனம், தெற்கு கந்தப்பிளளைக்கும் பெண் நேஸகத்துக்குமுரிய வாதனம் இதடங்கலும்.

133 பருத்தித்துறை ரேட்டு, நல்லூர், யாழ்ப்பாணம், 30—7—71

செ. விசாகரெத்தினம். கொமிஷனரும்விலைமதிப்பாளரும் எம். 181 7-8-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

கரையூர் யாழ்ப்பாணம்

1. டாக்டர் லூக் சூசைப்பிள்ளை
2. பெண் ருணி லூக் — வளக்காளிகள்

இல. M, B 7036

எதிராக

கரையூர்

1. நீக்லாபிளளை ஜோக்கிம்பிள்ளை
2 பரனுன்து நீக்லாபிள்ளை — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 7036-ம் இலக்க வளக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும ஒருதுண்டுக்காணி 1971-ம் ஸு ஆவணி மீ 21-ம் (21-8-71) சனிககிழமை முற்பகல் 10-00 மணிக்கு பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணி என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல் வட்டி ரூபாய் 3684/- இன்னும் ரூபாய் 2500/க்கு 10-11-64 தொடக்கம் 16-9-67 வரைக்கும் 12% வீதவட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5% வீதவட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 341-51. செலவில் ரூபா 125/- கொடுபட்டுள்ளது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளி கோயிற்பற்று கரையூரிறை 'குளந்தையன் குடியிருப்பும் அன்கித்தன் தறையும்" பர நி. இலா. 3/4 வீடு கிணறு குசினி செய்பயிர் வான்பயிர்கள் இன்னுமதைச் சேர்ந்தவைகளும், இதற்கெல்லை கிழக்கு ஞானப்பிரகாசம் பெண் எலிஸபெதினுதினம், வடக்கு ஸபஸ்ரியான்பிள்ளை பெண் ருஜேஸ்வரியினுதனம், மேற்கு றெயில் ரேட்டு, தெற்கு மேரிஜோஸபைனினுதனம் இதடங்கலுமதைச் சேர்ந்தவகைகளும் பதிவிலக்கம் D 258/297 தொடர்ச்சி D 297/239

183, பருத்தித்துறை ரேட்டு, நல்லூர் - யாழ்ப்பாணம், 30—7—71

செ. விசாகரெத்தினம் கொமிஷனர், விலைமதிப்பாளர் எம் 181 6—8

## கோட்டு விற்பனவு விளம்பரம்

M. B. 11325

காலஞ்சென்ற விஞயகர் சபாபதிப்பிள்ளை
அரா லிவடக்கு — வழக்காளி

1. பி சித்தியவான்
2. பெண் புஷ்பராணி இருவரும் அராலி வடக்கு — பதில் வளக்காளிகள்

எதிராக

வைத்திலிங்கம் இரசையா, வட்டுக்கோட்டை மேற்கு — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B 11325-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுகட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1971-ம் ஸு புரட்டாதி மீ 15-ம் உ (15-9-71) புதன்கிழமை முற்பகல 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபாய் 3605/-ம் 17-12-69 தொடக்கம் 7-5-70 வரைக்கும் ரூபாய் 2860/-க்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் ஆறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 352-90 ரூபாய் 1000/- கொடுபட்டுள்ளது 4-1-71 இல்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பிரிவு வட்டுக்கோட்டை கோயிற்பற்று வட்டுக்கோட்டை மேற்கு "கலவியோடை" பர-நில-இலா 1-14 குளி கொட்டில் செய்பயிர் வான்பயிர்களுடன் இதற்கெல்லை கிழக்கு கதிர்காமர் தாமோதரம்பிள்ளைக்கும் கதிகாமர் வேலுப்பிள்ளைக்குமுரிய காணிகளும் இக்காணிக்குச் செல்வதற்குரிய கைஒழுங்கை முகப்பும், வடக்கு அரியரெத்தினம் பெண் இரத்தினவதியினுதனம், மேற்க்கு வேலுப்பிள்ளை பொன்னையாவுக்கும், சரவணமுதது சிவப்பிரகாசம் பெண் கமலக்கிளியம்மாவுக்குரிய வாதனங்கள தெற்கு வெற்றிவேலு பெண் மனேன்மணியினுதனம் இதடங்கலும கிழக்குப்பக்கத்திலிருக்கும் கிணற்றில் ½ பங்குருத்தும் தூர்வையும் கை ஒளுங்கை ஓரமாக வழிவாய்க்கால் பாவிப்பு உருத்தும்,

14, டேவீற் வீதி, யாழ்ப்பாணம், 30—7—71

அ. போ. எதிர்மனசிங்கி கொமிஷனரும் விலைமதிப்பாளரும் எம். 185 6—8—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வயாவிளான் கிழக்கு சமத்தர் செல்லத்துரை

இல. M. B, 11950 — வழக்காளி

எதிராக

வளலாய் கிருஷ்ணர் இராசநாயகம் கைம்பெண் வள்ளியம்மை தானுகவும் தனது காலஞ்சென்ற புருஷன் கிருஷ்ணர் இராசநாயகத்தின் ஆதனத்தின் சட்ட பூர்வமான பிரதிநிதி வளலாய். — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M. B 11950-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1971-ம் ஆ புரட்டாதிமீ 30-ந் உ (30-9-71) வியாழக்கிழமை மூற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 2409-16 இதில் ரூபா 1400/-க்கும் 21-8-70 தொடக்கம் 8-3-71 வரைக்கும் 100-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 477-29 சதம் (செலவழித்த செலவு ரூபா 351-10 வெலியாத்துச் செலவு ரூபா 64-07. எதிர்வரும் செலவு 62-12.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலி கோயிற்பற்று பத்தைமேனிஇறை வண்ணன் கலட்டி ("Vannankalddy") பர. நில. 62-ம் வடலிகளும். இதற்குஎல்லை: கிழக்கு சின்னத்தம்பி பெண் பொன்னுவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், வடக்கு வள்ளியப்பர் சின்னப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், மேற்கு ஆறுமுகம் வல்லிபுரத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், தெற்கு ஒழுங்கை இவ்வெல்லைப்படி இதடங்கலிற் சொரியலாய் அரைவாசியிற் சொரியலாய் நில. பர. 11-ம் அதற்குரியவைகளும். K 234/283-ல் பதியப்பட்டிருக்கிறது.

இல. 24, முதலாம்குறுக்குத்தெரு, யாம்ப்பாணம். 14-7-71,

க. சுப்பிரமணியம் கொம்மிஷனரும் விலைமதிப்பாளரும், எம். 177 6-8-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு இலக்கம்: M B 10822

மீசாலை, சாவகச்சேரியைச் சேர்ந்த
செல்லபெருமாள் சிவராஜபிள்ளை —வழக்காளி

எதிராக

ஈட்டுக்காரராகிய இளையதம்பி செல்லபெருமாளுடைய சட்ட ரீதியான பிரதிநிதி

1. சின்னப்பா சந்திரசேகரம்பிள்ளையும் அவரின் மனைவி
2. அன்னலெட்சுமியும், திருநெல்வேலி தெற்கு. யாழ்ப்பாணம். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10822 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் மூன்று துண்டுக்காணிகள் 1971ம் ஸு புரட்டாதி மீ 3-ந் திகதி (3-9-71) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 1700/-ம் மேற்கொண்டு ரூபாய் 850/-க்கும் 16-3-70 தொடக்கம் 27-7-70 வரைக்கும் 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகையும் இறக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 450-90 சதம்.

### ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பிரிவு அல்லைப்பிட்டி கோவிற்பற்று மண்டைதீவு என்னும் கிராமத்தில்

1. "நஞ்சு தின்பான்" என்று அழைககப்படும் காணி நிலப்பரப்பு 73-ம் 3 குளியல் நிலப்பரப்பு 72ம் கிணறும் செய்பயிர்களும். எல்லை கிழக்கு முடிக்குரிய காணி. எல்லை வடக்கு வேலுப்பிளளை பொன்னம்பலத்தினதும்' மற்றையோரினதும் ஆதனம். எல்லை மேற்கு சின்னையா சதாசிவத்தினதும் மற்றையோரினதும் ஆதனம். எல்லை தெற்கு கடற்கரை மேற்சொல்லப்பட்ட சொரியல்க் காணியில் 1/6 பங்கு.

2. மேற்படி "நஞ்சுதின்பான்" காணி நிலப்பரப்பு 5ம் 3¼ குளியும் கிணறுகளும் எல்லை கிழக்கு வழி வாய்க்கால். எல்லை வடக்கு சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளையின் ஆதனம். எல்லை மேற்கு சிதம்பரப்பிள்ளை சிவஞானசுந்தரத்தின் ஆதனம், எல்லை தெற்கு சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளையினதும் மற்றையோரின் ஆதனமும். இதடங்கலும்.

3, மேற்படி 'பாம்பன்புலம்,' காணி நிலப்பரப்பு 22ம் 2 1/4 குளியும் வீடும் கிணறும் செய்பயிர்களும். எல்லை கிழக்கு வேலுப்பிள்ளை பொன்னம்பலத்தினதும் மற்றைறோரினதும் ஆதனம். எல்லை வடக்கு சிதம்பரப்பிள்ளை சிவஞானசுந்தரத்தினதும் மற்றையோரினதும் ஆதனம்; எல்லை மேற்கு வாரிசு சின்னக்குட்டி நாகனுதருக்கும் எல்லை தெற்கு சுப்பிரமணியசுவாமி கோவிலும் மற்றையோரினதும் ஆதனம். மேற்சொன்ன முழு ஆதனங்களுள் சொரியலாக 24/177 பங்கும். இதில் தபாற்கந் தோர்க் கட்டடம் பிறநீங்கலாக;

'வடிவேல் உதயம்" காங்கேசன்துறை வீதி, கோண்டாவில். 28-7-71

சி. ஆ. த. வடிவேலு, J. P. கொமிஷனரும், விலைமதிப்பாளரும், எம். 176 6—8—71

### திருத்தம்

30-7-71 இந்துசாதனத்தில் வெளிப்படுத்திய M B 9391 ஆம் இலக்க கோட்டு விற்பனவ விளம்பரத்தில் தீர்வைத்தொகையென்னும் பகுதியில் கடைசியாகவுள்ள வரியில் இதில் ரூபாய் 200/- கொடுபட்டது என்பதை ரூபாய் 2000/- என்று திருத்தி வாசிககவும்.

உ

# கடையிற்சுவாமி குருவார அன்னசத்திரம்.

## 1.5-1970 தொடக்கம் 30.4-1971 வரை.

## வரவு செலவுக் கணக்கு விபரம்

பண வரவு:

| | | | |
|---|---|---|---|
| திரு S வேலும்மயிலும் (சத்யா ஜூவலர்ஸ்) யாழ்ப்பா. | | 50 | 00 |
| ,, இ செலலப்பா, ஸ்ரான்லிவீதி | ,, | 50 | 00 |
| ,, S தியாகராஜா, ராஜாதியேட்டர் | ,, | 40 | 00 |
| ,, கா. பொன்னுததுரை (C T B) | ,, | 25 | 50 |
| ,, V M V நல்லநாதன் | ,, | 25 | 00 |
| சுபாஸ் கபே | ,, | 25 | 00 |
| றதிவோர்ச் கஸ்தூரியார் வீதி | ,, | 25 | 00 |
| ,, S துரைசிங்கம் புறக்டர், | கொழும்பு | 25 | 00 |
| ,, S R செல்லையா & Co. | யாழ்ப்பாணம் | 25 | 00 |
| துரை & கொம்பனி ஸ்ரான்லி வீதி | ,, | 25 | 00 |
| ,, ஆ இரத்தினசிங்கம் | ,, | 20 | 00 |
| ,, ஆ. இரகுநாதன் | ,, | 20 | 00 |
| ,, S பாலசிங்கம் பிரப்பங்குளம் | ,, | 25 | 00 |
| ,, S சிவராயலிங்கம், பேள் மெற்றல் இன்டஸ்றீஸ் | | 15 | 00 |
| திருமதி வடிவாம்பிகை, நாவலர் வீதி | ,, | 12 | 00 |
| திரு S S அப்துல்காதர், பெரியகடை | ,, | 10 | 00 |
| ,, வ இராசையா | ,, | 15 | 00 |
| ,, M S சிற்றம்பலம் | ,, | 10 | 00 |
| உடுப்பி லொட்ஜ், பெரியகடை | ,, | 10 | 00 |
| திரு P M நாகரட்ணம்செட்டியார் பெரியகடை | ,, | 15 | 00 |
| N S & Co. | ,, | 15 | 00 |
| ,, K பாலசுப்பிரமணியம் | ,, | 10 | 00 |
| பரிமளா ஸ்ரோஸ் | ,, | 10 | 00 |
| பத்மநாதன் ஸ்ரோஸ் | ,, | 5 | 00 |
| பொருள் விற்று வரவு: | | | |
| கிடுகு | | 45 | 75 |
| மீஞ்சிய அரிசி மற்றும் சாமான்கள் | | 243 | 33 |
| சாக்கு | | 2 | 50 |
| | | 799 | 08 |

### பொருள் உதவியோர்:

மீல்க்வைற்சோப் தொழிற்சாலை யாழ்ப்பாணம் 1 மூடை அரிசி
திரு V M K சோமசுந்தரம் யாழ்ப்பாணம் 1 மூடை அரிசு
,, K V கனகரத்தினம் பலாலிவீதி 2 மூடை அரிசி
,, T திருநாவுக்கரசு அளவெட்டி 1½ புசல் அரிசி
,, ஆ சிவலிங்கம் & சன்ஸ், ஆனைபபந்தி 1 புசல் அரிசி
,, ச வி முருகேசு பெரியகடை ¾ புசல் அரிசு
,, S M S பெரியகடை ½ புசல அரிசி
,, C S ஆறுமுகம்பிள்ளை பெரியகடை ½ புசல் அரிசி
கிருஷ்ணபவான் பெரியகடை ½ புசல் அரிசி
,, த இரத்தினசிங்கம நயினை 1 புசல் அரிசு
மடத்துக்கு வந்த அரிசி 6 படி அரிசி
,, E K தங்கராசா ஆனைப்பந்தி 1 புசல் அரிசி
,, A S சங்கரப்பிள்ளை & Bro, 14 இரு, மல்லி, 7 இரு. மிளகாய், 14 இரு. சீனி
,, S ராமையாச்செட்டியார் பெரியகடை ½ புசல் அரிசு
,, A பேரம்பலம் பெரியகடை 7 இரு, சீனி
,, K K A கந்தையாபிள்ளை பெரியகடை ½ துலாம் புளி
, க கு கந்தையாபிள்ளை பெரியகடை 14 இரு. வெங்காயம, 1/8 இரு. மஞ்சள்
,, A K கனகசபாபதி பெரியகடை 5 இரு. அப்பளம்
,, அப்துல் கசேன் ஜபேஜி பெரியகடை 14 இரு. பயறு
,, M நமசிவாயம் பெரியகடை 7 இரு, சீனி
,, C S K கந்தையாசெட்டியார் 2 கலன் தே. எண்ணெய்
,, வ க குணரததினம் பெரியகடை 14 இரு. வெஙகயம்
,, க சி ஆறுமுகம் பெரியகடை 7 இரு, வெங்காயம
,, ஆ இரததினசிங்கம் பெரியகடை 25 தேங்காய்
,, ஐ சின்னந்துரை & Son பெரியகடை ½ டசன டின்பால்
கல்கமுவா ஸ்ரோஸ் யாழ்ப்பாணம் 14 இரு, பயறு
,, மு வே பாலசிங்கம & Bro, ½ இரு, பூடு, ½ இரு. மிளகு
கணபதி ஸ்ரோஸ் பெரியகடை 7 இரு சீனி
மாகோ ஸ்ரோஸ் யாழ்ப்பாணம் சீனி
,, K V K P & Bro. 7 இரு. வெங்காயம்
வளர்மதி ஸ்ரோஸ் 7 இரு. வெங்காயம்
,, சி முருகேசு 3 கட்டு அப்பளம
,, S சின்னததுரை & Bro. 10 டின்பால்
கிருஷ்ணு ஸ்ரோஸ் பெரியகடை 7 இரு. கிழங்கு, 7 இரு. உப்பு
,, V M சண்முகம் & Bro. 1 இரு. பூடு
,, நா இ சிவலோகநாதன் 7 கட்டு அப்பளம், 3½ இரு. சீனி
கண்ணன் ஸ்ரோஸ் 28 இரு, சவ்வரிசி
,, M P சின்னராஜா பெரியகடை ½ டசின் பால்டின்
,, P சவலிங்கம் நாவலர் வீதி 1 டின் தயிர்
ரோகினி மரக்காலை யாழ்ப்பாணம் 1 தூக்கு விறகு
,, நெ சிவப்பிரகாசம் 3 தூக்கு விறகு
,, K பாலசுப்பிரமணியம் 10 ருத். பயறு
,, S T சண்முகநாதன் 5 ருத். கிழங்கு
,, M குமாரசாமிப்பிள்ளை 2 ருத். மிளகாய், 2 ருத். புளி, 2 ருத். மல்லி 1 ருத். பூடு
,, P வேலுப்பிள்ளை 5 ருத். பயறு, 7 ருத் உப்பு
,, K K சங்கரப்பிள்ளை 1/8 து, மல்லி, ¼ ருத், மஞ்சள
,, இ ச பேரம்பலம் 5 ருத். பருப்பு
,, S K N, பெரியகடை 5 கட்டு பப்படம்
,, ஆ துரைராசா 7 ருத் B வெங்காயம்
,, த, வேலுப்பிள்ளை 1 ருத், வெந்தயம், ½ ருத். சோம்பு,
,, C S கணபதிப்பிள்ளை 4 ருத், கோப்பி
,, சி கணேஸ், மாக்கட் 6 அவுன்ஸ் சீரகம்
,, S வேலுப்பிள்ளை சிரும்பியடி 2 தூக்கு விறகு
மாக்கட் வியாபாரிகள் 500 தேசிக்காய்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வட்டுக்கோட்டை மேற்கு முருகேசு ஆறுமுகம் —வழக்காளி

எதிராக

வட்டுக்கோட்டை கிழக்கு செல்லர் கந்தையா —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 10829 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971-ம் ஸு ஆவணி மீ 31ஆம செவவாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபாய் 1040/ம் 21-5-69 தொடக்கம் 22-10-69 வரைக்கும் ரூபாய் 600/க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 220/06.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டை கோவிற்பற்று வட்டுக்கோட்டை இறை "கலகளாசிட்டி" நில பர. 3 வீடும், கொட்டில்களும், கிணறும்: வான்பயிர் செய்பயிர்களும். இதற்கெல்லை கிழக்கு ஒழுங்கை முகப்பும் தம்பிமுத்து பூபாலசிங்கத்திற்குமுரிய ஆதனம். வடக்கு குமாரசாமி பெண் பாறுப்பிள்ளையின் உரிததாளருக்குரிய ஆதனம், மேற்கு நீலான் கைம்பெண் இலட்சுமிக்குரிய ஆதனம் தெற்கு நாகலிங்கம் கைம்பெண் மாணிக்கத்திற்கும, ஆறுமுகம் பெண் இரததினத்திற்குமுரிய ஆதனங்கள். இதடங்கலிற் சொரியலாய் 5/8 பாகம், ஆனல் கிழககெல்லை ஒழுங்கை முகப்பால் தெற்கெல்லை அருகாக மேற்குப் பிரிவுக்குப் போக்குவரவு செய்ய நாலுமுழ அகலக் கையொழுங்கை நிலம் பிறநீங்கல்.

46, 3-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்

இ. சு. தர்மரத்தினம்
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்.
எம். 174 6—8—71

### 1-5-70 தொடக்கம் 30-4-71 வரை செலவுக் கணக்கு

| | |
|---|---|
| பந்தல்போடக் கிடுகு 1000 | 95 - 00 |
| கயிறு, ஈக்கில் | 11 - 00 |
| வணடில் கூலி | 8 - 00 |
| தேநீர் | 5 - 00 |
| பந்தல்போடக் கூலி | 50 - 00 |
| போக்குவரத்துச் செலவு | 15 - 00 |
| 50 இந்துசாதனம் | 7 - 50 |
| மடல் கழுவ | 4 - 50 |
| 2 பாய் | 3 - 00 |
| சாமான் துப்பரவாக்க | 5 - 60 |
| கஸ்கொட்டை, பிளம்ஸ், அன்னுசி, பெருங்காயம் | 14 - 10 |
| 3 பல்ப் | 5 - 00 |
| காய்பிஞ்சு (நீர்வேலி) | 160 - 50 |
| தேங்காய் 35 | 7 - 00 |
| சமயல்காரர் கூலி | 52 - 08 |
| மடப்பள்ளி மேய | 9 - 00 |
| வழக்கு முத்திரைச் செலவு | 30 - 00 |
| பந்தல பிடுங்க | 10 - 00 |
| மேலதிக வரவு | 306 - 88 |
| | 799 - 08 |

### மேலதிக வரவு செலவுக் கணக்கு

| | | வரவு | செலவு |
|---|---|---|---|
| 1963 / 64 | மேலதிகச் செலவு | | 37 - 99 |
| | சி. வேலுப்பிள்ளை வசம் | 335 - 88 | |
| 1964 / 65 | மேலதிகச் செலவு | | 36 - 99 |
| 1965 / 66 | ,, ,, | | 95 - 75 |
| 1966 / 67 | மேல்திக வரவு | 21 - 02 | |
| 1967 / 68 | ,, ,, | 57 - 17 | |
| 1968 / 69 | மேலதிகச் செலவு | | 120 - 63 |
| 1969 / 70 | ,, ,, | | 213 - 45 |
| 1970 / 71 | மேலதிக வரவு | 306 - 88 | |

S. துரைசிங்கம், S. P கந்தையா, S. மகாதேவா,
V M, V. நல்லநாதன், R. C. மன்மதராயன்
27-7-71. (தர்மகர்த்தாக்கள்)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

பாண்டியன்தாழ்வு சுண்டிக்குளி, கனகசபை சின்னத்துரை கைம்பெண் புஸ்பராசமணி —வழக்காளி

வழக்கு இல: M B 6843

எதிராக

வண்ணுர்பண்ணை மேற்கு 1. தம்பு சோமசுந்தரமும், 2. அவரின் மனைவி சிவபாக்கியமும், வண்ணுர்பண்ணை கிழக்கு 3. கதிரவேலு நாகலிங்கமும் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 6843 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1971 ம் ஆண்டு புரட்டாதி மாதம 11 ம் திகதி (11-9-71) சனிக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: முதல் வட்டி ரூபாய் 4774/-ம, 29-7-64 தொடக்கம் 5-2-69 வரைக்கும 3000/- ரூபாவிற்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணுர்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மூ. மயில்வாகனம் அவர்களால் 6—8—1971 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மூ. மயில்வாகனம் அவர்கள்

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ இல: M B 10676 D C J

சவரிமுத்து எட்வேட் வண்ணுர்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம். —வழக்காளி

எதிராக

சூசைமுத்து அருளப்பு, வண்ணுர்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம். —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10676-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் துண்டுக்காணி 1971-ம் ஸு புரட்டாதி மீ 3-ந் திகதி (3-9-71) வெள்ளிகிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 5290/-ம், 14—3—69 தொடக்கம் 1—6—70 வரைக்கும் ரூபாய் 3000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 541 – 36 (ஏற்பட்ட செலவு 374 – 57 நடத்தும் செலவு 89 – 07 வரும் செலவு 77-72 (தீர்வையில் கழிககவேண்டிய தொகை ரூபாய் 1000/- செலவில் கழிக்க வேண்டியது ரூபா 150/-) கழிக்கவேண்டிய முழுத் தொகை ரூபாய் 1150/-

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கும் பிரிவும் வண்ணுர்பண்ணை கோவிற்பற்று வண்ணுர்பண்ணை தென்கிழக்கு நீலகுட்டிமடம் கி. பர. 3 (மூன்றும்) ஆனல் ஆட்சிப்படியும் அளவின்படியும் கி: பர, 2 குளி 5 இதில் மேற்குப் பக்கமாக அறுநின்ற அரைவாசி நீக்கி மிகுதி கிழக்குப் பக்கமாக கி. பர. 1 குளி 2½ எல்லை கிழக்கும், தெற்கும் ஒழுங்கை, வடக்கு றெயில்வே நிலம், மேற்கு மைக்கேல் பாக்கியநாதனும் மனைவி திறேசம்மாவும் அந்த எல்லைக்குட்பட்ட காணி அடங்கலும் அதற்கு சேர்ந்தவைகளும்.

S. சங்கரப்பிள்ளை J. P.
கொமிஷனர், விலைமதிப்பாளர்
'வேல்பதி" புத்தூர்
18-7-71 எம். 183 6-8

வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 437-50 சதம். இதில் ரூபாய் 1817/- தீர்வைத் தொகையாலும், கோட்டுச் செலவால் 100/- ரூபாவும் கொடுபட்டுள்ளது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பிரிவு வண்ணுர்பண்ணை கோவிற்பற்று, வண்ணுர்பண்ணை வட கிழககு வண்ணுர்பண்ணை இறை "வல்லூறு வாயடி மணல்காடு பிரமருயபிள்ளை புலமும்" கூன் தட்டான், மைலன் வளவும் நிலப் பரப்பு 2 ம் ½ குழியும் இதற்குள் புதிதாகக் கட்டிய கல்வீடும் வான் பயிர், செய்பயிர்களும் எல்லை கிழக்கு, வடக்கு, மேற்கு ஒழுங்கையும், தெற்கு கந்தையா சதாசிவத்தினதும பெண் நாகம்மாவினதும் ஆதனம். பதிவு இல: D 261/82

சி. ஆ. த வடிவேலு J. P.
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
ஏல விற்பனையாளரும்
"வடிவேல் உதயம்"
காங்கேசன்துறை வீதி
கோண்டாவில். 28-7-71.
M. 175 7—8—71



## இந்துசாதனம்

திருத்திய வருடசந்தாவிகிதம்

உள்நாடு

| | |
|---|---|
| ஆங்கிலம் | 10-00 |
| தமிழ் | 10-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 15-00 |

வெளிநாடு

| | |
|---|---|
| ஆங்கிலம் | 12-00 |
| தமிழ் | 12-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 18-00 |